සබරගමුව පළාත් අධ්‍යාපන දෙපාර්තමේන්තුව
**சபரகமுவ மாகாண கல்வித் திணைக்களம்**
**Sabaragamuwa Provincial Department of Education**

| | | |
|---|---|---|
| පළමු වාර පරීක්ෂණය | 2018 | 11 ශ්‍රේණිය |
| முதலாம் தவணைப் பரீட்சை | 2018 | தரம் 11 |
| First Term Test | 2018 | Grade 11 |

| | | |
|---|---|---|
| வரலாறு | II | மூன்று மணி |
| ඉතිහාසය | II | පැය තුනයි |
| History | II | Three Hour |

## பகுதி I

01.(அ) கீழே (i) தரப்பட்டுள்ள வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த இடங்கள் அனைத்தையும் உமக்கு வழங்கப்பட்டுள்ள இலங்கைப்படத்திலும் (ii) கீழ் தரப்பட்டுள்ள இடங்கள் அனைத்தையும் வழங்கப்பட்டுள்ள உலகப்படத்திலும் குறித்துக் காட்டுக.

i. வளவை கங்கை, கோகண்ண, அலிகல, பராக்கிரம சமுத்திரம், மினிஹா கல்கந்த, காலி, ராவண அல்ல, கிதுல்கல, பெலிலேன, புந்தல, மட்டக்களப்பு, ஜஜ்ஜர நதி, கோட்டை

ii. போர்த்துக்கல், டோக்யோ, புயல்முனை, பதேவியா, கொன்ஸ்தாந்துநோபிள், பாரசீக வளைகுடா

(ஆ) (I) கீழே ABCD என்பவற்றின் கீழ் தரப்பட்டுள்ள தகவல்களுக்குப் பொருத்தமான நபர்களை ஒழுங்குமுறைப்படி குறிப்பிடுக.

A. இலங்கையில் விசாலமான குளங்களை அமைப்பதில் முன்னோடியாகத் திகழ்ந்த மன்னன்

B. பொலன்னறுவையை ஆட்சி செய்த கலிங்க வம்சத்து மன்னன்

C. கலிகால சாகித்ய சர்வக்ஞ பண்டிதன் என்று அழைக்கப்பட்ட மன்னன்

D. கண்டி இராச்சியத்தை ஆட்சி செய்த இறுதி அரசன்

II. கீழே A மற்றும் B எனத் தரப்பட்டுள்ள படங்களின் உதவியுடன் கேட்கப்பட்டுள்ள வினாக்களுக்கு விடை தருக.

படம் A




i. படம் A இல் காட்டப்பட்டுள்ளது எது?

ii. இது அமைக்கப்பட்டிருந்த பிரதேசம் எது?

iii. இதனால் உற்பத்தி செய்யப்பட்டவை எவை?

iv. இதைச் செயற்படுத்துவதற்குப் பயன்படுத்திய தொழில்நுட்பம் யாது?

III. i. படம் B இன் மூலம் காட்டப்படுவது எது?



ii. இதை உற்பத்தி செய்தவர் யார்?

iii. அவர் எந்த நாட்டைச் சேர்ந்தவர்?

iv. இது எப்போது கண்டுபிடிக்கப்பட்டது?

## பகுதி II

02. i. இலங்கையின் வரலாற்றை அறியக்கூடிய உள்நாட்டு இலக்கிய மூலாதாரங்கள் மூன்றினைக் குறிப்பிடுக.? (3 புள்ளிகள்)

ii. வரலாற்றைக் கட்டியெழுப்பும் இலக்கிய மூலாதாரங்களைப் பயன்படுத்தும் போது கவனம் செலுத்த வேண்டிய 02 விடயங்களைக் குறிப்பிடுக. (4 புள்ளிகள்)

iii. வரலாற்றை கற்பதற்கு இலக்கிய மூலாதாரங்களை பயன்படுத்துவதன் பயன்கள் இரண்டைச் சுருக்கமாக விளக்குக.

iv. வரலாற்றைக் கற்பதன் முக்கியத்துவம் 03 ஐக் குறிப்பிட்டு விளக்குக. (6 புள்ளிகள்)

03. i. இலங்கையின் தற்கால மனிதன் வாழ்ந்த சுற்றாடல் வலயங்கள் மூன்றினைக் குறிப்பிடுக.(3 புள்ளிகள்)

ii. வரலாற்றுக் கால குடியிருப்புக்களின் பரம்பலில் செல்வாக்குச் செலுத்திய காரணிகள் நான்கைக் குறிப்பிடுக. (4 புள்ளிகள்)

iii. வரலாற்றுக்கு முற்பட்ட காலத்தில் காணப்பட்ட சடங்கு சம்பிரதாய முறையை 02 உதாரணங்கள் மூலம் விளக்குக. (5 புள்ளிகள்)

iv. முன்வரலாற்றுக் காலத்தில் பயன்படுத்தப்பட்ட தொழினுட்பத்தை மூன்று காரணிகளுடன் விளக்குக. (6 புள்ளிகள்)

04. i. பின்வரும் பதவிப் பெயர்கள் யாரைக் குறிக்கின்றது என்பதை ஒழுங்குவரிசைப்படி குறிப்பிடுக.

A. பருமக

B. தொட்டபோஜக

C. கிராமிக

ii. பின்வரும் சம்பவங்களுடன் தொடர்புடையவர்களின் பெயர்களை எழுதுக. (3 புள்ளிகள்)

A. முதல் முறையாக இலங்கை முழுவதையும் ஒரே நிருவாகத்தின் கீழ் கொண்டு வந்த மன்னன்.

B. திரிபிடகத்தை நூல் வடிவம் செய்கின்ற போது இலங்கையை ஆட்சி செய்த மன்னன்

C. தெவனகலைக் கல்வெட்டில் குறிப்பிடப்பட்டுள்ள பொலன்னறுவை ஆட்சியாளன்

D. நாயக்கர் வம்ச முதலாம் ஆட்சியாளன் (4 புள்ளிகள்)

iii. இந்நாட்டில் அரசியல் உரிமை கிடைக்கப் பெற்ற இரு முறைமைகளையும் உதாரணத்துடன் விளக்குக. (5 புள்ளிகள்)

iv. வசப மன்னனின் அரசியல், பொருளாதார, சமய சேவை ஒவ்வொன்றைக் குறிப்பிட்டு விளக்குக. (6 புள்ளிகள்)

05. i. பண்டைய காலத்தில் சூழலைப் பேணுவதற்கு சட்டங்களை இயற்றிய மன்னர்கள் மூவரின் பெயர்களை குறிப்பிடுக. (3 புள்ளிகள்)

ii. பதுளை தூண் கல்வெட்டில் வியாபாரம் தொடர்பான குறிப்பிடப்பட்டிருந்த சட்டங்கள் 2 ஐக் குறிப்பிடுக. (4 புள்ளிகள்)

iii. புராதன காலத்தில் சமூகத்தில் காணப்பட்ட பின்வரும் சட்டங்களைச் சுருக்கமாக விளக்குக.

A. படுகொலைச் சட்டம்

B. உள்நாட்டு தண்டப்பணச் சட்டம் (5 புள்ளிகள்)

iv. பண்டைய காலத்தில் சமூகத்து பெண்கள் தொடர்பாக காணப்பட்ட நடைமுறைகளை 3 உதாரணத்தின் மூலம் விளக்குக. (6 புள்ளிகள்)

06. i. இரண்டாம் நகரமயமாக்களின் போது தோற்றம் பெற்ற நிருவாக மையங்கள் 3ஐக் குறிப்பிடுக. (3 புள்ளிகள்)

ii. தம்பதெனிய இராசதானியை ஆட்சி செய்த 2ஆம் பராக்கிரமபாகு செய்த சேவைகள் 2ஐக் குறிப்பிடுக. (4 புள்ளிகள்)

iii. கோட்டையை ஆட்சி செய்த ஆறாம் பராக்கிரமபாகுவின் அரசியல் மற்றும் சமய சேவைகள் இரண்டினைக் குறிப்பிட்டு விளக்குக. (5 புள்ளிகள்)

iv. முதலாம் விமலதர்மசூரிய மன்னன் அரசியல் அதிகாரத்தைப் பெற்றுக் கொள்வதில் எதிர் கொண்ட சவாலொன்றைச் சுருக்கமாக விளக்குக. (6 புள்ளிகள்)

07. i. இந்தியாவிற்கு வந்த பிரித்தானியர் அமைத்துக் கொண்ட வர்த்தக மத்திய நிலையங்கள் 02 ஐயும் பிரான்சியர் அமைத்துக் கொண்ட வர்த்தக நிலையம் ஒன்றையும் குறிப்பிடுக. (3 புள்ளிகள்)

ii. பிரித்தானியர் இலங்கை மீது கவனம் செலுத்துவதற்கான காரணங்கள் இரண்டினைக் குறிப்பிடுக. (4 புள்ளிகள்)

iii. 1818ம் ஆண்டின் சுதந்திரப் போராட்டத்திற்கான காரணங்கள் 02 ஐக் குறிப்பிட்டு விளக்குக. (5 புள்ளிகள்)

iv. பௌத்த மறுமலர்ச்சி இயக்கத்தின் மூலம் பௌத்த தலைவர்களால் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகளை 03 உதாரணங்களுடன் விளக்குக. (6 புள்ளிகள்)

## பகுதி III

08. i. மறுமலர்ச்சியின் போது பின்வருவனவற்றைக் கண்டுபிடித்தவர்களைக் குறிப்பிடுக.

A. அச்சு இயந்திரம்

B. குருதிச் சுற்றோட்டத் தொகுதி

C. புவியீர்ப்பு (3 புள்ளிகள்)

ii. மறுமலர்ச்சிக் காலத்தில் அரசியல் ரீதியாக ஏற்பட்ட மாற்றங்கள் 02 ஐக் குறிப்பிடுக.
(4 புள்ளிகள்)

iii. ‘‘புதிய வர்த்தகப் பாதையைக் கண்டுபிடிப்பதில் மறுமலர்ச்சிக் கால நவீன கண்டுபிடிப்புக்கள் உதவியது.’’ இதனை 03 உதரணத்தின் மூலம் உறுதிப்படுத்துக.

iv. போர்த்துக்கேயர், ஒல்லாந்தர் ஆங்கிலேயர் ஆகியோர் இலங்கைக்கு வந்தமையால் ஐரோப்பாவின் மறுமலர்ச்சி இலங்கையிலும் செல்வாக்குச் செலுத்தியது. அவ்வாறு செல்வாக்குச் செலுத்திய துறைகள் 3ஐக் குறிப்பிட்டு விளக்குக.
(6 புள்ளிகள்)

09 i. பிரித்தானியாவின் கைத்தொழில் புரட்சியானது பிரதான 03 துறைகளில் ஏற்பட்டது. அம்மூன்று துறைகளையும் குறிப்பிடுக.
(3 புள்ளிகள்)

ii. பின்வரும் கண்டுபிடிப்புக்களை மேற்கொண்டவர்களை அடைப்புக்குறிக்குள் இருந்து தெரிவு செய்து ஒழுங்கு முறையில் எழுதுக.

A. மியூள் இயந்திரம்

B. உருக்கு உற்பத்தி செய்யும் இயந்திரம்

C. பாதுகாப்பு விளக்கு

D. வானொலி

(ஹென்றி பேஸ்மர், சாமுவேல் கொரம்டன், குக்லி மார்க்கோணி, ஜேம்ஸ் வோர்ட், அலெக்சாண்ட கிரகம்பெல், ஹம்றி டேவி)

iii. கைத்தொழில் புரட்சி விவசாயத் துறையின் வளர்ச்சியில் செல்வாக்குச் செலுத்திய விதத்தை 2 காரணிகளைக் கொண்டு விளக்குக.

iv. கைத்தொழில் புரட்சி உலகிற்கு ஏற்படுத்திய நன்மையான விளைவுகள் 02 ஐயும் தீமையான விளைவு ஒன்றையும் குறிப்பிட்டு விளக்குக.
(6 புள்ளிகள்)